உ

சிவமயம்



சைவ சமயிகள்

தினமும் இயற்றிவரவேண்டிய

# அநுட்டான விதியும் பாராயண மாலையும்

[ சுருக்கம் ]

வெளியீடு :

கிளிநொச்சி,
சிவயோக சுவாமிகள் நற்பணி மன்றம்

குரோதன தைத்திங்கள் பூசத்திருநாள்

1986

112

உ

சிவமயம்

சைவ சமயிகள்

தினமும் இயற்றிவரவேண்டிய

# அநுட்டான விதியும்

# பாராயண மாலையும்

சுருக்கம்

வெளியீடு ;

கிளிநொச்சி,

சிவயோக சுவாமிகள் நற்பணி மன்றம்

குரோதன தைத்திங்கள் பூசத்திருநாள்

1986

# வெளியீட்டுரை

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

" எனை யாண்ட சிவயோக
குருமணிகள் திருவடி போற்றி."

சைவமாம் சமயம் சாரும் பேறு, அரியவற்றுள் எல்லாம் அரியதாகும். அப்பேறு பெற்றோர் சிவனை மறவாது பணிந்து அவனருள் பெற்றுய்வர்.

திருக்கோயிலுக்குச் சென்று இறைவழிபாடு இயற்றுதல் சாலச் சிறந்தது. காலைமாலை வேளைகளில் இல்லங்கள் தோறும் வழிபாடு இயற்றுதல் பெரும்பயன் விளைக்கும். தமிழரின் அடிப்பட்ட வழக்கமும் அது.

சைவசமயிகள் ஏழாம் வயதில் சமயதீட்சை பெறுதல் வேண்டும் என்பது விதி. சமயதீட்சை பெற்றோர், தினமும் தவறாமல் அநுட்டானம் செய்து வருதல் வேண்டும்.

அநுட்டான விதி, ஆகமங்களில் பேசப்பட்டுள்ளதென்பர். அதுமிகவும் பரந்துபட்டுள்ளது. அதனைத் தினமும் இயற்றுதற் கேற்றவகையில் முன்னை முனிவரரும், நாவலர் பெருமானும், சைவச் சான்றோர் சிலரும் எழுதி உதவியுள்ளனர். அவையும் இந்நாளில் விரிந்து பட்டனவாகவே காணப்படுகின்றன.

இன்று எக்காலத்தையும் விடச்சிறுர்களைச் சமயவாழ்வில் ஈடுபடுத்தவேண்டிய பணி இன்றியமையாத தொன்ருகி உள்ளது.

எனவே, அநுட்டான விதியைச் சிவாசாரியார்களின் அனுமதியுடன் சுருக்கித் தொகுப்பித்து வெளியிடுகின்ருேம்; சைவ உலகம் பயன்படுத்தி நலம் பெறுவதாக.

மேலும், காலை மாலை நேரவழிபாட்டினைச் செவ்வனே இயற்றுவதற்காக ஒரு ஒழுங்கு நிரலையும் வகுப்பித்துள்ளோம். வழிபாட்டின்போது பாராயணம் செய்தற்கு உதவக்கூடிய வகையில் திருமுறைகளில் இருந்து சில பதிகங்களையும் சேர்ப்பித்துள்ளோம்.

இச்சிறு நூலைத் தொகுத்துதவிய, பண்டிதர், க. மயில்வாகனன் அவர்களுக்கும் நூல்சிறப்புற நல்லாலோசனை கூறியுதவியபண்டிதர், சிவத்திரு. ச. பஞ்சாட்சர சர்மா அவர்களுக்கும் மீள் பார்வை செய்துதவிய பண்டிதர் சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையோம்.

யாவற்றிற்கும் மேலாகச் அணிந்துரை அளித்து நூலைச் சிறப்பித்த கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோயில் பிரதமகுரு. சித்தாந்தபாநு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள் அவர்களுக்கும் வாழ்த்துரை நல்கிய பெரியார் திரு. சு. பொன்னுச்சாமி அவர்களுக்கும் நூலைச்சிறப்புற அச்சிட்டு உதவிய யாழ்ப்பாணம் கு. வி. அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

வெளியீடு சம்பந்தமாக செங்கலடி சிவதொண்டன் ஸ்ரீ செல்லத்துரை சுவாமிகளுடன் கலந்துரையாடினோம். சுவாமிகளின் அணிந்துரையுடன் வெளியிடுவது என்றும் தீர்மானித்திருந்தோம். இருந்தும் காலநிலையும் தபால் தொடர்புகளும் - சுவாமிகளின் அணிந்துரை பெறும் வாய்ப்பைத் தடுத்து விட்டன. இருப்பினும் அவர்களின் ஆசீர்வாதம் என்றும் உண்டென நம்புகின்றோம்.

இறுதியாக, "எமது சமயத்தின் பழைமையில் ஊறிப்போன சிலரின் நடவடிக்கைகளால் எமது சைவத்தின் சில கிரியை முறைகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இழந்து நிற்கின்றோம்". இப்பொழுது எமது மாவட்டமாகிய கிளிநொச்சியிலும் இழக்கும் நிலையிலும் உள்ளோம். எனவேதான் இலகுவான முறையில் அநுட்டானக் கிரியைகளை இக்கால சந்ததியினர் அறியவேண்டும் என்ற நன்நோக்கத்திற்காக இந்நூலை வெளியிடுகின்றோம். சைவர்கள் பயனடைவார்களாக.

"துன்பே கவலை தொடராவண்ணம்
அன்பே வந்திங் கெனையாள் வாயே"

சர்வோதயம் — க. கதிரமலை
யாழ்ப்பாணம் — சிவயோக சுவாமிகள் நற்பணி மன்றத்திற்காக
26-1-86.

உ
சிவமயம்

# அணிந்துரை

**சித்தாந்தபாநு சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக் குருக்கள்**
(பிரதமகுரு, கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோயில்)

சைவ சமயத்திற் பிறந்தவர்கள், இயம நியமங்களை அநுட்டித்து நல்வாழ்வு வாழ்வதற்குக் குருவின் மூலமாகச் சிவன் திருநாமமாகிய ஸ்ரீ பஞ்சாட்சர மகா மந்திரத்தை உபதேசம் பெற வேண்டும். இவ்விதம் மந்திரோபதேசம் பெருதவர்கள் சைவசமயிகள் என்று சொல்லப்படுவதற்கும் சைவக் கிரியைகளை அநுட்டிப்பதற்கும் உரிமையற்றவர்கள். குருவின் மூலமாகப் பெற்ற மந்திரத்தைச் சந்தியாவந்தனம் என்னும் அநுட்டானக் கிரியைகளோடு நாடோறும் செபிக்க வேண்டியது சைவ சமயத்தவர் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாகும்.

செபத்துக்குரிய எல்லா அம்சங்களோடும் கூடிய ஒரு வழிபாட்டு முறையே சந்தியாவந்தனமென்றும் அநுட்டானமென்றும் கூறப்படுகிறது. இதனைத் தினமும் சிரத்தையோடு செய்பவர்கள், சிவபிரானது திருவருள் தம்மிடத்திற் பதியப் பெற்று அதனுல் இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவது உறுதியாகும்.

சிவதீட்சை பெற்ற பலர் அநுட்டான விதிமுறைகள் விரிவாய் அமைந்திருத்தலாலும், அவற்றை முழுமையாக அநுட்டிக்க நெருக்கடிமிக்க வாழ்க்கை நிலைமை இடங்கொடாமையாலும், அநுட்டானம் செய்வதை முற்றுகவே கைவிட்டுவிடுகிருர்கள். பலர் தீட்சை பெற முன்வராமல், ஒதுங்கிவிடுகிருர்கள். இந்நிலைமையை நன்குணர்ந்த சிவயோக சுவாமிகள் நற்பணி மன்றத்தினர், இன்றியமையாத அங்கங்கள் யாவுமடங்கச் சுருங்கிய அளவில் "அநுட்டான விதியும் பாராயண மாலையும்" என்னும் இந்நூலை வெளியிடுவது சைவாபிமானிகளால் வரவேற்கப்பட வேண்டிய நற்பணியாகும். காலத்திற்கேற்ற சிவப்பணியுமாகும்.

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக்குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

சோ. சுப்பிரமணியக் குருக்கள்.

# வாழ்த்துரை.

''ஞாலம் நின்புகழே மிகல் வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் அநாதியே''

பத்தியே கடவுள் தரிசனத்திற்கு வழி. முதிர்ந்த பத்தியே ஞானம். எமது முன்னோர், இறைஞானத்திலேதான் பண்பின் வளர்ச்சி பூரணமடைகின்றது என அநுபவத்தில் உணர்ந்திருந்தனர். இந்த உணர்வின் வெளிப்பாடாகத்தோன்றியவையே எமது அநுட்டான நூல்கள்.

சைவ இளைஞர்கள் இந்த அநுட்டான நூல்களில் தெளிவு பெறாமையே நாம் இன்று அநுபவித்துவரும் துயரங்களுக்கெல்லாம் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. அநுட்டான நூல்களைக் கற்று ஒழுகுவதோடு மட்டும் நின்றுவிடாமல் ஆலயதரிசனம் செய்துவருவதும் இன்றியமையாத வேண்டற்பாலதாம்.

மஹாபுருஷர்களின் அவதாரங்களுக்கு முதலும் முடிவும் உண்டு. அவர்கள் தரிசனம் பெற்று உய்திகூடுவோர் ஒருசிலரே! ஆனால் திருக்கோயில் தரிசனம் எக்காலத்தும் பெரும்பயன் விளைவிப்பதாகும். இறைவன் திருக்கோயில்களில் சிவலிங்கம் முதலிய திருமேனிகளில் சாநித்தியமாக எழுந்தருளிநின்று தரிசனம் தந்தருளுகின்றார். அவதாரபுருஷர்களின் அருளைக்குறிப்பிட்ட ஒருகாலத்திலே தான் பெறுகின்றோம். இறைவன் திருவருள் சதாகாலமும் எம்மோடு இருக்கின்றது.

எமது சமயகுரவர்கள் திருக்கோயில்களில் இறைவனைக்கண்டு பூஜித்தும் பாடியும் வந்துள்ளார்கள் என்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

நாமெல்லாம் "நல்வாழ்வுக்கு ஈசன்இன்னருள் அன்றி வேறு உபாயம் இல்லை'' என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அகங்காராதிகளை விடுத்து, கண்ணைத்துயின்றவமே காலத்தைப்போக்காமல், அநுட்டான விதியினை நாடொறும் இயற்றி இறைவன் புகழைப் பாடி இருமையும் இன்பம் பெறுவோமாக.

முயற்சி வீண்போவதில்லை. குழப்பங்களும் கலவரங்களும் நிறைந்த இந்நாள்களில் இச்சிறு நூல் இளைய தலைமுறையினருக்கு மட்டுமன்றிப் பெரியோர்களுக்கும் பெரும்பயன் விளைவிக்கவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

திருச்சிற்றம்பலம்

ஆட்பாலவர்க்கு அருளும் திறமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை; கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்.

திருச்சிற்றம்பலம்

"யமுனா"
கொக்குவில்
26. 1. 86

சு. பொன்னுச்சாமி

உ

சிவ சிவ சிவ

# காலைமாலை வழிபாட்டுக்கிரமம்

1. தினமும் காலைமாலை நேரங்களில் உடற்சுத்தி செய்து கொள்க.
2. சிவ சிவ சிவ என்று திருநீறு சாத்திக் கொள்க.
3. அநுட்டானத்தை இயற்றிக் கொள்க.
4. வீட்டினுள் வழிபாட்டிற்கென அமைந்துள்ள இடத்தினை அடைக.
5. சுவாமிப் படத்திற்குத் திருவிளக்கு ஏற்றுக.
6. மலர்சாத்தி அலங்கரிக்குக.
7. நறும்புகை இடுக.
8. தீபவழிபாடு இயற்றுக.
9. விநாயகர் தோத்திரம் பாடுக.
10. பஞ்சபுராணம் ஓதுக.
11. அருச்சனைப் பதிகம் பாடுக.
12. வாழ்த்துப்பதிகம் பாடுக.
13. இடர்தீர்க்கும் திருப்பதிகம் இசைக்குக.
14. ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் இயற்றுக.

உ

# மூல மந்திரம்

சிவ மூலமந்திரம் : நமசிவ்ாய

தேவி மூலமந்திரம் : உமாதேவ்யை நம :

விக்னேசுர மூலமந்திரம் : கணபதயே நம :

சுப்பிரமணிய மூலமந்திரம் : சரவணபவாய நம :

சூரிய மூலமந்திரம் : சிவசூர்யாய நம :

## பதினொரு மந்திரம்

### பஞ்ச பிரம்ம மந்திரங்கள் 5

ஈசாநாய நம :

தத்புருஷாய நம :

அகோராய நம :

வாமதேவாய நம :

சத்தியோ சாதாய நம :

### ஷடங்க மந்திரங்கள் 6

இருதயாய நம :

சிரசே நம :

சிகாயை நம :

கவசாய நம ;

நேத்திரேப்யோ நம :

அஸ்திராய நம :

உ
கணபதி துணை

# அநுட்டான விதி

உடற்சுத்தி செய்தபின் சிறிய பாத்திரத்தில் தூயநீரை எடுத்துக்கொள்க.

## 1. பூமிசுத்தி:

பாத்திரம் வைக்கும் இடத்தையும், தான்இருக்கும் இடத்தையும் ''அஸ்திராயபட்'' என்னும் மந்திரத்தைக் கூறி நீர் தெளிக்கவும்.

நீர்நிறைந்த பாத்திரத்தை வைக்கவும். கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் பீடத்தில் அமர்ந்து கொள்ளவும்.

## 2. கணபதி குருவணக்கம்:

,'கணபதயே நம:'' என்று உச்சியில் மும்முறை குட்டி, குருப்யோநம: என்று கும்பிடவும்.

## 3. சலசுத்தி: [அநுட்டான நீரைச் சுத்தி செய்தல்]

(i) நிரீக்ஷணம் [மந்திர உச்சரிப்புடன் பார்த்தல்] வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல்களை உள்ளே மடக்கிக் கொண்டு பெருவிரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக ''நமசிவாய'' என்னும் மந்திரத்தை உச்சரித்து வலக்கண், நெற்றிக்கண் இடக்கண்களினால் பாத்திரத்தில் உள்ள நீரைப்பார்க்கவும்.

(ii) திக்குப்பந்தனம் [காவல் செய்தல்] ''அஸ்திராயபட்'' என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பெருவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் சேர்த்து நான்கு புறமும் ஒலி எழுப்பவும்.

(iii) ''அவகுண்டனம்'' [கீழ் நோக்கிச்சுற்றுதல்] ''கவசாய வௌஷட்'' என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நீட்டிய வலக்கைச் சுட்டுவிரலால் நீரோடு கூடிய பாத்திரத்தை மூன்று முறை வளைக்கவும்.

4. ஆசமனம் [ நீர் உறிஞ்சுதல் ]

வலக்கைப் பெருவிரலடியில் சிறிதளவு நீரை (உழுந்து அமிழ்ந்தக் கூடிய நீரை) வைத்துக்கொண்டு ஆத்ம தத்துவாய சுவதா, வித்தியா தத்துவாய சுவதா, சிவதத்துவாய சுவதா என்னும் மந்திரங்களை உச்சரித்து அந்நீரை உறிஞ்சிக் கொள்ளவும்.

5. அதர சுத்தி

அஸ்திராயபட் என்னும் மந்திரம் கூறி வலக்கைப் பெருவிரலடியினால் அதரங்களைத் துடைத்துக்கொள்ளவும். பின்னர் கையைக் கழுவிக்கொள்ளவும்.

6. அங்கஸ்பரிசம் [ தொடுமிடம் தொடுதல் ]

இருதயாயவௌஷட் என்னும் மந்திரத்தினாலே பெருவிரலோடு கூடிய அணி விரலினாலே முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, கொப்பூழ், மார்பு, வலதோள், இடத்தோள், சிரசு என்னும் இப்பன்னிரண்டு இடங்களையும் தொட்டுக்கொள்ளவும்.

7. விபூதி சுத்தி

(i) வலக்கைப் பெருவிரல் நடுவிரல் அணிவிரல் மூன்றினையும் சேர்த்து விபூதியை எடுத்து இடக்கையில் வைக்கவும்.

(ii) அஸ்திராயபட் மந்திரம் கூறி நீர் தெளிக்கவும்.

(iii) சிறு துளிவிபூதியைப் பெருவிரல் அணிவிரல்களால் எடுத்து அஸ்திராய ஹூம்பட் மந்திரம் சொல்லி நிருதி மூலையில் (தென் மேற்குத் திக்கில்) தெளிக்கவும்.

(iv) முன்போல் நிரீக்ஷணம் செய்யவும், அதாவது வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல்களை உள்ளே மடக்கிக்கொண்டு பெருவிரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக நமசிவாய என்னும் மந்திரத்தை உச்சரித்து வலக்கண் நெற்றிக்கண் இடக்கண்களினால் விபூதியைப்பார்க்கவும்.

(v) முன்போல் திக்குப்பந்தனம் செய்யவும். அதாவது அஸ்திராயபட் என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு பெருவிரல் நுனியையும் சுட்டுவிரல் நுனியையும் சேர்த்து நான்கு புறமும் ஒலி எழுப்பவும்.

(vi) முன்போல் அவகுண்டனம் செய்யவும் அதாவது கவசாய வௌஷட் என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நீட்டிய வலக்கைச் சுட்டுவிரலால் விபூதியை மூன்று முறை வளைக்கவும்.

8; விபூதியை அபிமந்திரித்தல்: [உருவேற்றுதல்]

இடக்கையில் வைத்துச் சுத்திகரிக்கப்பட்ட விபூதியை: ஈசானாயநம:, தத்புருஷாயநம:, அகோராயநம:, வாமதேவாயநம:, சத்தியோசாதாயநம:, இருதயாயநம:, சிரசேநம:, சிகாயைநம:, கவசாயநம:, நேத்திரேப்யோநம:, அஸ்திராய நம: என்னும் பதினொரு மந்திரங்களாலும் உருவேற்றிக் கொள்ளவும்.

9; மலஸ்நானம். [உத்தூளனமாகப் பூசுதல்]

மந்திரிக்கப்பட்ட விபூதித்துளியை வலக்கைப் பெருவிரல் அணிவிரல்களால் எடுத்து அஸ்திராயபட் மந்திரத்தை உச்சரித்து, தலைதொடங்கிக் கால்வரையும் பூசிக்கொள்க.

10. விதிஸ்நானம்: [திரிபுண்டரமாகப்பூசுதல்]

இடக்கையில் இருக்கும் திருநீற்றின் மீது வலக்கைப்பெருவிரலோடு கூடிய நடுவிரலினாலே இருதயாயவௌஷட் மந்திரத்தை உச்சரித்து நீர்விட்டுக் கவசாய வௌஷட் மந்திரத்தை உச்சரித்து இரு கைகளினாலும் குழைத்துக் கொள்க.

ஈசானாய நம: என்று சிரசிலும்

தத்புருஷாய நம: என்று நெற்றியிலும்

அகோராய நம: என்று மார்பிலும்

வாமதேவாய நம: என்று கொப்பூழிலும்

சத்தியோ சாதாய நம: என்று முழந்தாள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து ஆகிய 16 இடங்களிலும் திரிபுண்டரமாகத் தரித்துக் கொள்க.

11; மந்திரஸ்நானம்:

திரிபுண்டரமாகத் தரித்து எஞ்சிய விபூதியோடு நிறையைச் சலம் விட்டு வலக்கையால் மூடிக்கொண்டு ஈசானாயநம: தத்புருஷாய நம: அகோராய நம: வாமதேவாய நம: சத்தியோ சாதாய நம: என்னும் ஐந்து மந்திரங்களையும் உச்சரித்து உருவேற்றிச் சிரசிலே தெளிக்கவும். கையை அலம்பிக் கொள்ளவும்.

## 12. ஆசமனம் :

முன்போல ஆசமனம் செய்து கரசுத்தி பண்ணிக்கொள்ளவும்.

## 13. பிராணாயாமம் :

வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல் இரண்டையும் உள்ளே மடக்கிக்கொண்டு பெருவிரலால் வலப்புற மூக்கையும், சுட்டு விரலால் இடப்புற மூக்கையும் பற்றுக. இடப்புற மூக்கால் சுத்த வாயுவை நிரப்புக. உள்ளே நிரம்பிய வாயுவை நிறுத்தி வைக்குக. மீண்டும் வலப்புற மூக்கால் அசுத்த வாயுவை வெளியேற்றுக.

வலப்புற மூக்கைப் பிடித்துக்கொண்டு ஈசாநாய நம: முதலிய 11 மந்திரங்களையும் உச்சரிக்குக.

வலஇட மூக்கைப் பிடித்துக்கொண்டு ஈசாநாய நம: முதலிய 11 மந்திரங்களையும் உச்சரிக்குக.

இடப்புற மூக்கைப் பிடித்துக்கொண்டு ஈசாநாய நம: முதலிய 11 மந்திரங்களையும் உச்சரிக்குக.

முடிவில் நமசிவாய மந்திரம் கூறி வலக்காதைப் பொத்திக் கொள்க.

## 14. உருத்திர தியானம் :

திருச்சிற்றம்பலம்

மைக்களமும் மான்மழுவும் வரதமுடன் அபயமுறு
மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கருறு மதிச்சடையும் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாம்காண முன்னின்றே அருள்புரிந்தான்.

திருச்சிற்றம்பலம்

என்னும் பாடலைப் பாடிச் சிவபெருமானுடைய திருவுருவைத் தியானிக்குக.

## 15. மூலமந்திர செபம் :

நமசிவாய : என்னும் சிவமூலமந்திரத்தை 108 தரமாயினும் 50 தரமாயினும் 25 தரமாயினும் 10 தரமாயினும் செபித்துக்கொள்க.

உமாதேவ்யைநம : என்னும் தேவிமூலமந்திரத்தை 10 தரம் செபித்துக்கொள்க.

கணபதயேநம : என்னும் விக்கினேசுர மூலமந்திரத்தை 10 தரம் செபித்துக்கொள்க.

சரவணபவாயநம : என்னும் சுப்பிரமணியர் மூலமந்திரத்தை 10 தரம் செபித்துக்கொள்க.

**16. தோத்திரம் :**

பின்வரும் பாடல்களை ஓதுக.

திருச்சிற்றம்பலம்

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என் பாவிநெஞ்சில்
குடிகொண்ட வாதில்லை அம்பலக்கூத்தன் குரைகழலே.

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீக்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத்திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி

திருவுங்கல்வியும் சீருந்தழைக்கவும்
கருணைபூக்கவும் தீமையைக்காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமாமுத்துப் பிள்ளையைப் பேணுவாம்

மூவிருமுகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந்துதிக்க நின்றஇராறு தோள் போற்றிகாஞ்சி
மாவடிவைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும்மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன்கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரானடி போற்றி
வாழிதிருநாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள்போற்றி

பொன்னங் கடுக்கை முடி வேய்ந்த
புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னும் கலனு டைகள் பிறவும்
வேறு தனக்கென்ற மையாமே
மன்னுந் தலைவன் பூசனையின்
மல்கும் பயனை யடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளும்
தூயோனடித் தாமரை தொழுவாம்.

17. அட்டதிக்குப் பாலகர் வணக்கம் :

எழுந்து நின்று அட்டதிக்குப் பாலகரை வணங்குக.

இந்திராய நம : எனக் கிழக்கு நோக்கியும்
அக்நயே நம : எனத் தென்கிழக்கு நோக்கியும்
யமாய நம : எனத் தெற்கு நோக்கியும்
நிருதயே நம : எனத் தென்மேற்கு நோக்கியும்
வருணாய நம : என மேற்கு நோக்கியும்
வாயுவே நம : என வடமேற்கு நோக்கியும்
குபேராய நம : என வடக்கு நோக்கியும்
ஈசானாய நம : என வடகிழக்கு நோக்கியும் கும்பிடுக.

18. சாஷ்டாங்க நமஸ்காரம் :

பார்வதீ சமேத பரமேசுவராய நம : என்று வடக்கு நோக்கிச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணுக.

19. ஆசமனம் :

முன்போல ஆசமனம் செய்க.

20. பூமி சுத்தி :

அஸ்திராயபட் : என்று தான் இருந்த இடத்துக்கு நீர் தெளிக்குக. அதனைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளுக.

பாத்திரத்தில் உள்ள நீரை வெளியே கால்படா இடத்தில் கொட்டுக.

21. சூரிய நமஸ்காரம் :


தொடர்ந்தாற்போல செந்நிறப்பூக் கொண்டு சூரியபகவானை நோக்கிச் சிவசூரியாய நம : என்று பணிந்து இருமுறை சுற்றிக் கொள்க.

குறிப்பு :

( வயதும் பயிற்சியும் கூடக்கூட சைவ இளைஞராயினர். இவ்வநுட்டான விதியில் குறிப்பிடப்படாத சிவதீர்த்தகரணம், மந்திராபிஷேகம், மார்ச்சனம், அகமர்ஷணம், கவசவேஷ்டனம், தருப்பணம், தீர்த்தோபசங்காரம் முதலியவற்றையும் கிரமப்படி சேர்த்துக்கொள்ளுதல் நலம் பயக்கும். விரிவை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நித்திய கருமவிதியினுள்ளும் கமலை ஞானப்பிரகாசதேசிகர் இயற்றிய அநுட்டான அகவலுள்ளும் காண்க.

# பாராயண மாலை

உ



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பண்: காந்தாரம், திருநாவுக்கரசு சுவாமிகள்

பலபல காமத்த ராகிப்பதைத் தெழுவார் மனத்துள்ளே
மலமலக் கிட்டுத்திரியும் கணபதியென்னும் களிறும்
வலமேந் திரண்டுசுடரும் வான்கயிலாய மலையும்
நலமார் கெடிலப்புனலும் உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

# சிவபெருமான் துதி

## பஞ்ச புராணம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

### திருவாசகம்

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமல சேவடியாய்
திருப் பெருந் துறையுறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டு கொண்டின்றே.

### திருவிசைப்பா

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

### திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித்தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## உமாதேவியார் துதி

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள் தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனம் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பும் அடிகள்போற்றி

திருச்சிற்றம்பலம்

## முருகக்கடவுள் துதி

திருச்சிற்றம்பலம்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் — என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை.

திருச்சிற்றம்பலம்

## அருச்சனை

ஒவ்வொரு போற்றி முடிவிலும் சுவாமிக்கு மலர் சாத்துக. வசதிக்கேற்றவாறு பாடல்களைக் கூட்டியும் குறைத்தும் கொள்ள லாம்.

### போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதம் ஆனாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 1

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 3

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
அஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரை கழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 7

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி

வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தென்னுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுராபோற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 9

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. 10

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள்ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# வேண்டுதல்

## [ பிரார்த்தனை ]

[ வசதிக்கேற்றவாறு பாடல்களைக் கூட்டியும் குறைத்தும் பாடலாம் ]

திருநெடுங்களம்

பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப்பே சினல்லாற்
குறையுடையாய் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

நின்அடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்அடியான் உயிரைவவ்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடைஆ ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடும் தலைவநின்தாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்தி இராப்பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனும்
சூழஎங்கும் நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியரும் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்

உ

## சிவயோக சுவாமிகள் அருளிய

# போற்றி போற்றி சிவசிவ போற்றி.

அந்தமும் ஆதியும் அகன்றோன் வருக
செந்தண்மை பூண்ட செல்வன் வருக
பந்தமும் வீடும் படைப்போன் வருக
எந்தமை யாளும் இறைவன் வருக
கற்பனை கடந்த கடவுள் வருக
சொற்பதங் கடந்த தொல்லோன் வருக
பாரொடு விண்ணாய்ப் பரந்தோன் வருக
சீரொடு பொலியுஞ் சிவனவன் வருக
சிந்தா மணியென் தேவன் வருக
நந்தா விளக்கே நலஞ்சுடர் வருக
நீற்றொடு பொலியும் நிமலன் வருக
ஆற்றொடு தோற்றும் அமலன் வருக
அற்புதன் வருக அநேகன் வருக
பொற்புடன் நடஞ்செய் புனிதன் வருக
விற்பொலி நுதலான் விமலன் வருக
சொற்றுணை வேதியன்
பொற்று ளிணைகள் பொலிந்து வாழ்க
கற்றோ ரேத்துங் கழலடி வாழ்க
மற்றோ ரறியா மலர்ப்பதம் வாழ்க
அற்றோர்க் குதவும் அருட்பதம் வாழ்க
தன்னே ரில்லாத் தாளிணை வாழ்க
என்போல் வந்த இணையடி வாழ்க
கண்போற் காக்குங் கழலடி வாழ்க
விண்போல் விளங்கும் மெய்யடி வாழ்க
பெண்பா லுகந்த பித்தன் வாழ்க
மண்மேல் மலரடி வைத்தோன் வாழ்க
தற்பரன் வாழ்க சதாசிவன் வாழ்க
சிற்பரன் வாழ்க சின்மயன் வாழ்க
முழுதுமாய் நின்ற முதல்வன் போற்றி

தொழுமடி யார்கள் துணைவா போற்றி
என்றுமெ னுளத்தில் இருப்பாய் போற்றி
மன்று ளாடும் மணியே போற்றி
பொன்று முடலைப் பொறுக்கேன் போற்றி
சென்றடை யாத செல்வா போற்றி
ஆதி போற்றி அரனே போற்றி
சோதி போற்றி சுடரே போற்றி
நீதி போற்றி நிறைவே போற்றி
மாதொரு பாக மலர்ப்பதம் போற்றி
ஏதொரு பற்றிங் கில்லைப் போற்றி
போற்றி போற்றி பொன்னடி யென்றும்
போற்றி போற்றி சிவசிவ போற்றி.

## மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னு லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரருக்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

கு. வி. அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.